# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

மனு எண்: 542 /2017/ஊராட்சி

ஆணை எண்: 074/2017

நாள்: 25/04/2017

I. கங்காதரன்,
6/51c, மேல கட்டிமாங்கோடு.
கட்டிமாங்கோடு Po., கன்னியாகுமரி மாவட்டம். - மனுதாரர்

முன்னாள் தலைவர்,
துணைத் தலைவர்,
ஊராட்சி செயலாளர்,
கட்டிமாங்கோடு ஊராட்சி. - எதிர் மனுதாரர்கள்

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கட்டிமாங்கோடு ஊராட்சியில் வசிக்கும் திரு. I. கங்காதரன் என்பவர், அவருடைய 17.4.2017 நாளிட்ட மனுவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு 30.6.2015 நாளிட்ட கடிதத்தில் அனுப்பிய புகார் மனுவின் நகலினை அனுப்பியுள்ளார். அதில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், கட்டி மாங்கோடு ஊராட்சியில் 2009-12ன் தணிக்கையின் அடிப்படையில் கீழ்காணும் மோசடிகள் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளார்:-

(1) செலவு சீ. எண்கள் 191/30.12.09, 192/30.12.09, 200/12.1.10, 251/03.02.10, 63/04.7.09, 122/22.9.09, 139/26.10.09, 197/04.1.10, 204/20.1.10, 258/13/19.03.10, 304/பத்தி எண்.34 செ.சீ.எ. 33/22.7.09 முதல் செ.சீ.எண். 36/24.3.10 (2) வசூல் செய்யப்பட்ட வரி ரூ.1230/ஐ ஊராட்சி கணக்கில் செலுத்தப்படவில்லை (3) தொழில் வரி ரூ.41,622/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. (4) தொழில் வரி ரூ.940/- திருமதி. K. லலிதாவிடம் பிடித்தம் செய்யப்படவில்லை. (5) மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி சுத்தம் செய்ததில் உண்மைக்கு புறம்பாக ரூ.48,600/- வழங்கியது (6) 162 மூட்டை சிமெண்ட் எடுத்த விபரம் வழங்கப்படாதது (7) தெய்வசாமி என்பவருக்கு ரூ.73,914/- வழங்கிய போது துறை பிடித்தம் செய்யப்படவில்லை. இது போன்று பல மோசடிகள் நடந்துள்ளன எனத் தெரிவித்து இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு கட்டிமாங்கோடு ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
I. கங்காதரன்,
6/51C, மேல கட்டிமாங்கோடு,
கட்டிமாங்கோடு Po.,
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்:
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில். (இணைப்புகளுடன்)